SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள்
அமுதப் பெருவிழா

**சுருக்கம்**

**கூட்டுறவு – கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சி - பர்கூர் மற்றும் பட்டுக்கோட்டை கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக தொழிற்கல்வி வழங்க ஏதுவாக பயிற்சிக் கட்டணமாக ஆண்டொன்றுக்கு ரூ.11,40,000/- வீதம் இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ.22,80,000/- அரசு நிதியுதவி அனுமதித்தல் - நிருவாக அனுமதி அளித்து - ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிகே)த்துறை**

**அரசாணை (நிலை) எண்.104** — **நாள்: 23.11.2021**

**பிலவ வருடம், ஐப்பசி - 07**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டவை:**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம்
ந.க.எண்.38307/2021/திகசஉப1, நாள் 05.08.2021.

-----

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதத்தில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக 1992-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் செயல்படும் கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களால் புதுடில்லியில் உள்ள **National Council for Vocational Training (NCVT)** அங்கீகாரத்துடன் தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வழிகாட்டுதலுடன் பின்வரும் விவரப்படி பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

| Sl. No. | Courses | Period | Qualification | Course Fee | Spl. Fee per year | In take |
|---|---|---|---|---|---|---|
| 1. | Electrician | 2 year | SSLC Pass | - | Rs.15,000/- | 20 |
| 2. | COPA | 1 year | HSc Pass | - | Rs. 5,000/- | 48 |
| 3. | Food Production | 1 year | SSLC Pass | - | Rs. 5,000/- | 48 |
| 4. | Sewing Technology | 1 year | $8^{th}$ Pass | - | Rs.1,500/- | 40 |

மேற்கண்ட தொழில் பயிற்சிகளுக்கு முழுமையாக பயிற்சியாளர்களை சேர்க்கும் பட்சத்தில் ஆண்டுக்கு ஒரு பயிற்சி நிலையத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.11,40,000/-

(த.பி.பா.)

90



வீதம், இரண்டு பயிற்சி நிலையங்களுக்கு மொத்தம் ரூ.22,80,000/- பயிற்சியாளர்களால் பயிற்சி கட்டணமாக செலுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தமிழகத்தில் உள்ள பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் சார்ந்த வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தும் வகையிலும் ஏழை எளிய மாணவர்கள் படித்து பயன்பெறும் வகையிலும் பர்கூர் மற்றும் பட்டுக்கோட்டையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் அனுமதியுடன் கூட்டுறவு தொழிற் பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டது என்றும், தொழிற்பயிற்சி நிலையங்கள் பின்தங்கிய கிராமப்புற பகுதியில் அமைந்துள்ளதால், அப்பகுதியில் உள்ள தினக்கூலி மற்றும் விவசாயக் கூலிகளின் பிள்ளைகளே தொழிற்கல்வி பயிலும் சூழல் உள்ளது எனவும் தற்போது கொரோனா பாதிப்பின் காரணமாக ஊரக பகுதி மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிப்படைந்துள்ளது என்றும், ஆதலால் அம்மாணவர்களால் மேற்படி பயிற்சிக்கான கட்டணத்தை செலுத்தி பயிற்சியினை பெற இயலாத நிலை உள்ளது என்றும், இக்காரணத்தால் மேற்கண்ட இரண்டு பயிற்சி நிலையங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கை விகிதத்தில் பயிற்சியாளர்களால் சேர இயலாத நிலையும் உள்ளது என்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

2. தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் (Industrial Training Institute) அரசு ஒதுக்கீட்டின் அடிப்படையில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு நகரத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர் நபர் ஒருவருக்கு ரூ.12,000/- மற்றும் கிராமப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெறும் மாணவர் ஒரு நபருக்கு ரூ.10,000/- பயிற்சிக் கட்டணம் அரசால் அளிக்கப்பட்டு வருகிறது எனவும், கூட்டுறவுத்துறையின் கீழ் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் பர்கூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இரண்டு கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு நிதியுதவி எதுவும் பெறப்படவில்லை என்றும், பர்கூர் மற்றும் பட்டுக்கோட்டை தொழிற்பயிற்சி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட 4 பாடப்பிரிவுகளின் மூலம் நடத்தப்படும் பயிற்சிகளுக்கு ஒரு பயிற்சி நிலையத்திற்கு வசூலிக்கப்படும் மொத்த தொகை ரூ.11,40,000/- வீதம், இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ.22,80,000/-இல் இப்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்படும் பயிற்சியாளர்களின் கல்வி கட்டணம் முழுவதும் அரசால் வழங்கப்படும் நேர்வில் மேற்படி தொழிற் பயிற்சியில் சேரும் மாணவர்களுக்கு இலவசமாக தொழிற் பயிற்சி வழங்க ஏதுவாகும் என்றும் எனவே, இதர தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மாநில அரசு நிதியுதவி வழங்குவதைப் போன்று கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கும் பயிற்சிக் கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.22,80,000/- அரசு நிதியுதவி அனுமதித்து அம்மாணவர்களுக்கு இலவசமாக தொழிற்கல்வி அளிக்க ஏதுவாக ஆணைகள் வழங்கிடுமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

... 3

3. மேலே பத்தி-2 இல் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று இதர தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மாநில அரசு நிதியுதவி வழங்குவதைப் போன்று, பர்கூர் மற்றும் பட்டுக்கோட்டை கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக தொழிற்கல்வி வழங்க ஏதுவாக சம்பளத் தொகைக்கு அல்லாமல் அம்மாணவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பயிற்சிக் கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.11,40,000/- வீதம், இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ.22,80,000/-க்கு (ரூபாய் இருபத்து இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) அரசு நிதியுதவி அனுமதிக்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் (அ.சா.எண்.49746/நிதி (கூ.உ.(ம) நு.பா.)/2021, நாள் 20.11.2021) ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

முகமது நசிமுத்தின்
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை -10.
தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல் பதிவாளர்/
மேலாண்மை இயக்குநர், சென்னை -10
(கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மூலமாக)
மாநில முதன்மை கணக்காயர், சென்னை – 35.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை- 18.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் , சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர்(கூட்டுறவு)அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலாளர்,
நிதித்துறை, சென்னை – 9
கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை
தனிச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத்துறை , சென்னை – 9
நிதி (கூ,உ(ம)நு.பா) துறை, சென்னை – 9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிஜி)த் துறை,
சென்னை – 9.
இருப்பு கோப்பு/ உதிரிகள்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

V. [illegible]
24.11.2021

பிரிவு அலுவலர்.